## <u>சுருக்கம்</u>

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியரை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லுதல் – 2014–2015 ஆம் ஆண்டு திட்டத் தொடராணை மற்றும் ரூ.1,36,200/– நிதி ஒப்பளிப்பது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.33** **நாள்: 15.10.2014**

**ஜய–புரட்டாசி 29, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்க:**

1. அரசாணை (1டி) எண்.09, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 22.08.2013.
2 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3287/சிபதி/2014, நாள் 09.09.2014.

----

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் ஆண்டிற்கு, அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் அனைத்து வகையான மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளையும், கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல அனுமதி அளித்தும், இச்செலவினத்திற்கென ரூ.1,44,800/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2014–2015 ஆம் கல்வியாண்டில், 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுச் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் பார்வைத் திறன் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட, மனவளர்ச்சி குன்றிய மற்றும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.1,36,200/–ஐ பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்து அனுமதி ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்:–

| வ. எண் | பள்ளியின் பெயர் | மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை | தேவைப்படும் தொகை |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசுச் சிறப்புப் பள்ளிகள் | 330 | ரூ.66,000/– |
| 2. | செவித் திறன் பாதிக்கப்பட்டோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் | 244 | ரூ.48,800/– |
| 3. | மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு சிறப்புப் பள்ளி | 80 | ரூ.16,000/– |
| 4. | கை, கால் கடுமையாக பாதிக்கப்பட்டோருக்கான அரசு சிறப்புப் பள்ளி | 27 | ரூ.5,400/– |
| | **மொத்தம்** | **681** | **ரூ.1,36,200/–** |

**[த.பி.பா]**

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2014–2015 ஆம் ஆண்டில், அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் அனைத்து வகையான மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளையும், கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல ரூ.1,36,200/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

| **வ. எண்** | **கணக்குத் தலைப்பு எண்** | **நிதி வரவு செலவு திட்டத்தில் ஒப்பளிக்கப் பட்டுள்ளத் தொகை** | **தற்போது செலவிடக் கோரும் தொகை** |
|---|---|---|---|
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** |
| (a) | **“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன்– I–திட்டத்தில் சேராதது – AA–பார்வையற்றோர் பள்ளி - 54-திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு”.** (து.தொ.கு.2235–02–101–AA–5404) | **ரூ.81,000/–** | **ரூ.66,000/–** |
| (b) | **“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்– 101–மாற்றுத் திறனாளிகள் நலன்– I-திட்டத்தில் சேராதது – AR–காது கேளாதோர் பள்ளிகள் – 54 திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு”.** (து.தொ.கு.2235–02–101–AR–5400) | **ரூ.43,000/–** | **ரூ.48,800/–** |
| (c) | **“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்– 102–குழந்தைகள் நலன்– I-திட்டத்தில் சேராதது – AZ–மனவளர்ச்சி குன்றியவர் நல நிலையம் தொடங்குதல் – 54-திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு”.** (து.தொ.கு.2235–02–102–AZ–5404) | **ரூ.16,000/–** | **ரூ.16,000/–** |
| (d) | **“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்– 101–மாற்றுத் திறனாளிகள் நலன்– I-திட்டத்தில் சேராதது – BE–கை, கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி பள்ளி – 54-திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு”.** (து.தொ.கு.2235–02–101–BE–5405) | **ரூ.6,000/–** | **ரூ.5,400/–** |
| | **மொத்தம்** | | **ரூ.1,36,200/–** |

**[த.பி.பா]**

5. மேற்படி சுற்றுலாவை, மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலுடன், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுலா அலுவலர்களுடன் இணைந்து செயல்படுத்திடவும், இவ்வாண்டு கல்விச் சுற்றுலா செயல்படுத்துவதன் மூலம் கிடைக்கப் பெறும் அனுபவங்களைக் கொண்டு, தேவையான மாற்றங்களோடு, எதிர் வரும் ஆண்டுகளில் கல்விச் சுற்றுலாவை தொடர்ந்து செயல்படுத்திடவும், மேலும் இது குறித்து வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்குமாறும் மற்றும் மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில் மீதம் இருப்பின், அதனை 2014–2015 ஆம் ஆண்டின் இறுதியில் அரசு கணக்கில் ஒப்படைப்பு செய்யுமாறும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி–4ல் உள்ள அட்டவணையில், இனம் (b)ல் காதுகேளாதோர் பள்ளிக்கு ஒப்பளிக்கப்பட்டத் தொகையில், 2014–15 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.43,000/– போக மீதமுள்ள தொகை ரூ.5,800/– திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கம் 2014–15ல் சேர்க்கப்படும். இந்நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, இத்தொகையைப் பெற்று இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. 2014–15 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கீடு கருத்துருக்களை நிதித் (சந) துறைக்கு அனுப்பும் போது இச்செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.53981/நிதி(சந)/2014, நாள் 13.10.2014–இல் பெறப்பட்ட இசைவின்படி மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1301 (ஆயிரத்து முன்னூற்று ஒன்று)–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
இயக்குநர், சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளாகம், சென்னை–2.
**நகல்**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78 வழியாக)
மாண்புமிகு அமைச்சர் (சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டம்) அலுவலகம், சென்னை–9
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9
நிதித் (சந)/(வ.செ.பொ.II)துறை, சென்னை–9.
இ.கோ. / உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.